செ. கு. எண்: 051 நாள் : 26.07.2015

# அறிக்கை

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கே** தொடர்ந்து வெற்றியைத் தருகிறார்களே, மாநிலத்திலும், மத்தியிலும் எந்தப் பதவியும் பெற முடியாதபடி தன்னைப் பரிதவிக்க விட்டுவிட்டார்களே என்பதற்காக, தமிழக மக்கள் மீது கடுங்கோபத்தில் இருக்கும் கருணாநிதி, மக்களைக் குழப்புவதன் மூலமாக மட்டுமே தன் எண்ணத்தை ஈடேற்றிக் கொள்ள முடியும் என்ற ஒரே முடிவுடன், அரைகுறை புள்ளி விவரங்களை அள்ளித் தெளித்து, பொய்யுரைகளும், புனைந்துரைகளும் இடையில் செருகிச் செருகி, அன்றாடம் அறிக்கைகளை வெளியிட்டு வருகிறார்.

அந்த வரிசையில் கருணாநிதி கடைசியாக கையில் எடுத்திருப்பது குடிநீர்ப் பிரச்சனை. ‘‘குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க என்ன நடவடிக்கை?’’ என்ற தலைப்பில் 23.07.2015 அன்று அறிக்கை வெளியிட்டுள்ள கருணாநிதி, எதிர்காலத்தை கணித்துக் கூறும் ஜோதிட சிகாமணியாக தன்னை பாவித்துக்கொண்டு, **மாண்புமிகு அம்மா அவர்கள்** தலைமையிலான அரசு குடிநீர்ப் பிரச்சனை குறித்து அக்கறை இல்லாது இருப்பதைப் போல ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்க முயற்சித்திருக்கிறார்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்,** கடந்த 2011ம் ஆண்டு மே மாதம் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல், மக்களின் அடிப்படைத் தேவையான குடிநீர்ப் பிரச்சனையில் தனிக்கவனம் செலுத்தி, நீடித்த, நிலைத்த குடிநீர் ஆதாரங்களுடன் திட்டங்களை சிறப்புடன் செயல்படுத்தி வருவதை கருணாநிதி அறியமாட்டார் போலும்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆட்சியில்தான் தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் 98.95 விழுக்காடு குடியிருப்புகளுக்கு குழாய் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு

இந்தியாவிலேயே, தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்கின்றது என்பதை அவர் தெரிந்து கொள்ளவேண்டும்.

இதுமட்டுமல்ல, குடிநீர்ப் பிரச்சனை தொடர்பாக ஏதோ அன்றைக்கே அவர் சொன்னதாகவும், தற்போது நாளேடுகளில் செய்தி வெளியானதும் அதிகாரிகளை அழைத்து பேசுவதாகவும் கருணாநிதி வியாக்கியானம் செய்திருக்கிறார்.

மாநில மக்களின் குடிநீர்த் தேவையைக் கருத்தில் கொண்டு, குறிப்பாக கோடைக் காலத்தில் எவ்வித தட்டுப்பாடும் இன்றி குடிநீர் வழங்கிட, முன்னதாகவே ஆய்வுகள் மேற்கொண்டு பணிகளை துரிதப்படுத்தி செயல்படுத்திட வேண்டும் என்பது **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** ஆணை ஆகும். **மாண்புமிகு அம்மா அவர்களின்** இந்த ஆணையின்படி, கடந்த பிப்ரவரி மாதம் முதலே, சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகராட்சி நிர்வாகம், பேரூராட்சிகளின் நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டன. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், 20.07.2015 அன்று சென்னை குடிநீர் வடிகால் வாரியத்தில் சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்குவது தொடர்பாக துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. ஆனால், குடிநீர் பிரச்சனை குறித்து கருணாநிதி குறிப்பிடும் பத்திரிகைச் செய்திகள் 22.07.2015 அன்று தான் வெளியிடப்பட்டன.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்** ஆணைப்படி 15 நாட்களுக்கு ஒருமுறை ஆய்வுக் கூட்டம் நடைபெற்று வருகின்ற நிலையில், உண்மைக்குப் புறம்பாக, நாளேடுகளில் செய்தி வந்த பிறகே அதிகாரிகளுடன் கூட்டம் நடத்தியது போல சிறு பிள்ளைத்தனமான அறிக்கை வெளியிட்டிருப்பது கருணாநிதியின் தரத்தையும் திறத்தையும் வெளிப்படுத்துகிறது.

கருணாநிதியின் ஆட்சிக்காலம் என்பது வெற்று அறிவிப்புக் காலம்தான், திட்டங்களின் அறிவிப்பை, ஆட்சியின் கடைசி நாள் வரை அறிவிப்பாகவே வைத்திருந்து, அறிவிப்பாகவே விட்டுச் செல்வதில் கருணாநிதிக்கு நிகர் கருணாநிதி தான். நிதி ஆதாரம் இறுதி செய்யப்படமாட்டாது; ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யப்படமாட்டாது; ஒப்பந்த நிறுவனம் தேர்வு செய்யப்படமாட்டாது; பணி ஆணை வழங்கப்படமாட்டாது; இப்படி எதுவுமே செய்யாமல், வெந்ததைத் தின்று விதி வந்தால் முடியும் ஆட்சி கருணாநிதி ஆட்சி. ஆனால் **மாண்புமிகு அம்மா அவர்களின்** ஆட்சியோ செயல்திறன் ஆட்சி. தான் அறிவித்ததை மட்டுமல்ல, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் அறிவிப்புகளையும் செய்து முடிக்கும் மக்கள் செல்வாக்கு மிக்க ஆட்சி. அது தான் **மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி.**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக புரட்சித்தலைவி அம்மா அவர்கள்,** கடந்த **2011**ம் ஆண்டு பொறுப்பேற்றதும், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் வெறும் அறிவிப்புகளாக விட்டுச்செல்லப்பட்ட எட்டு கூட்டுக்குடிநீர்த் திட்டங்களில் மதுரை–மேலூர் கூட்டுக் குடிநீர் திட்டம், பல்லடம் கூட்டுக் குடிநீர் திட்டம், விருதுநகர் மாவட்டத்தில் **3** கூட்டுக் குடிநீர் திட்டங்கள், நாகப்பட்டினம் கூட்டுக் குடிநீர் திட்டம், ஆத்தூர் நரசிங்கபுரம் கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் வேலூர் கூட்டுக் குடிநீர் திட்டம் ஆகிய **8** கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்காக ரூ.**3276.62** கோடி ரூபாய் நிதி ஆதாரங்களை இறுதி செய்து, அனைத்து திட்டங்களுக்கும் ஒப்பந்த நிறுவனங்களை உறுதி செய்து, பணி ஆணைகளை வழங்கி விரைந்து நிறைவேற்றினார். அதன் பயனாகத்தான், சேலம், விருதுநகர் மாவட்டங்களில் **3** கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மக்கள் பயன்பாட்டிலும், மதுரை, வேலூர் மாவட்டங்களில் **2** கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் சோதனை ஓட்டத்திலும் மற்ற **3** திட்டங்கள் செயலாக்கத்திலும் உள்ளன.

இது மட்டுமல்லாமல், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** ஆணையிட்டவாறு மக்களின் குடிநீர்

பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் புதிதாக கடலூர், தஞ்சாவூர், கோயம்புத்தூர், கன்னியாகுமரி, திண்டுக்கல் மற்றும் சேலம் மாவட்டங்களில் தலா ஒரு கூட்டுக் குடிநீர் திட்டமும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 2 கூட்டுக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களும் ஆக **எட்டு பெரிய கூட்டுக் குடிநீர் திட்டங்களை ரூ.2408.34 கோடி மதிப்பில்** செயல்படுத்த உரிய ஆணைகள் வழங்கப்பட்டு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இதனையும் சேர்த்து, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மாநிலத்திலுள்ள நீடித்த, நிலைத்த நீராதாரங்களைக் கொண்டு மொத்தம் 154 பெரிய மற்றும் சிறிய குடிநீர்த் திட்டங்கள் மற்றும் 10,719 தனிமின்விசைத் திட்டங்கள் **ரூபாய் 9,275.65 கோடி மதிப்பீட்டில்** மேற்கொள்ளப்பட்டு, இதில் **88 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் அனைத்து தனி மின்விசைத் திட்டங்களும் முடிக்கப்பட்டு** மக்கள் பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள திட்டங்களை விரைந்து முடிக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

01.04.2011 வரை கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலம் நாளொன்றுக்கு வழங்கப்பட்ட குடிநீர் 1150 மில்லியன் லிட்டர் ஆகும். ஆனால், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்** சீரிய நிர்வாகத் திறமையால் நாளொன்றுக்கு கூடுதலாக 350 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கி தற்போது சராசரியாக நாளொன்றுக்கு 1500 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது.

நிலைமை இவ்வாறிருக்க, கருணாநிதி குறிப்பாக திமுக ஆட்சியில் 2008–09ம் ஆண்டில் 289.88 கோடி ரூபாய் செலவில் 50 நகர்ப்புற குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன என்றும், 2012–13ம் ஆண்டில் 15.77 கோடி செலவில் 7 நகர்ப்புறக் குடிநீர்த் திட்டங்கள் தான் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் கூறுவது நாட்டுநிலை பற்றியும் நடப்பு நிலை பற்றியும் அறியாமல் பிதற்றும் வெற்றுப் பிதற்றலாக உள்ளது.

ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்குவதை பொருத்தமட்டில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஒரு புதிய குடிநீர் புரட்சியை ஏற்படுத்தி வருகிறது என்றே சொல்ல வேண்டும்.**

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், **01.04.2011** அன்றைய கணக்கெடுப்பின்படி, மொத்த ஊரகக் குடியிருப்புகளின் எண்ணிக்கை **94,500** ஆக இருந்தது. அந்தக் கால கட்டத்தில் இவற்றில் **8,586** குடியிருப்புகளுக்கு பகுதியாக குடிநீர் வசதி வழங்கப்பட்டு வந்தது**. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் அரசு, 2011** மே திங்களில், பதவி ஏற்றபின் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் **5,518** புதிய குடியிருப்புகள் கண்டறியப்பட்டு **மொத்த குடியிருப்புகளின் எண்ணிக்கை 1,00,018 ஆக உயர்ந்தது.** இவற்றில், முழுமையாக குடிநீர் வசதி பெற்ற குடியிருப்பு என்று சொல்லப்பட்டபோதிலும் போதிய மழையின்மையின் காரணமாக **9406** குடியிருப்புகள் அவ்வப்பொழுது பகுதி அளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகளாக மாறியது கண்டறியப்பட்டது. இந்த குடியிருப்புகளும், ஏற்கனவே பகுதி அளவு குடிநீர் வசதி பெற்ற **8586** குடியிருப்புகளும் ஆக பகுதியாக குடிநீர் வசதி பெற்று வந்த மொத்தம் **23,510** குடியிருப்புகளுக்கு சிறிய மற்றும் பெரிய குடிநீர்த் திட்டங்கள் மூலம் தற்போது முழுமையான குடிநீர் வசதி செய்யப்பட்டு வருகின்றது. ஆக **3,747** குடியிருப்புகள் மட்டுமே தற்போது பகுதியாக குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகளாக உள்ளன. **மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில்** தமிழகத்தில் தற்போது மொத்தம் உள்ள **1,00,018** குடியிருப்புகளில் **96,271** குடியிருப்புகள் முழுமையான அளவு குடிநீர் வசதி பெற்று வருகின்றன என்பதை மிகவும் பெருமையுடன் தெரிவித்து கொள்கின்றேன். **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** மேற்கொண்டு வரும் தீவிர நடவடிக்கை காரணமாக மீதமுள்ள பகுதி குடிநீர் வசதி பெறும் **3747**குடியிருப்புகளுக்கும் **2015–16** ஆம் நிதியாண்டில் முழுமையான அளவில் குடிநீர் வழங்கப்பட்டு ஊரக பகுதிகளுக்கு முழுமையாக குடிநீர் வழங்கும் பணி **100** விழுக்காடு நிறைவு செய்யப்படும்.

இந்த ஆண்டு தமிழகத்தில் போதிய மழையின்மை காரணமாக ஏற்படலாம் என்று எதிர்பார்க்கும் குடிநீர் தட்டுப்பாட்டினை சமாளிக்க, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின்** ஆணைப்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் நிலநீர் பிரிவில் பெறப்பட்ட புவியியல் வரைபடங்களுக்கு ஏற்றவாறு நீராதாரங்கள் தேர்வு செய்து, கூடுதலாக புதிய ஆழ்துளைக் கிணறுகள் கைபம்புகளுடன் அமைத்தல் மற்றும் சிறு மின் விசைப்பம்புகளுடன் அமைக்கும் பணிகள், கைப்பம்புகள் பராமரிப்புக்கான உதிரி பாகங்கள் வாங்கும் பணிகள், லாரிகள் மூலம் குடிநீர் வழங்குதல், சின்டக்ஸ் பிளாஸ்டிக் தொட்டிகள் நிறுவுதல், ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணறுகளைத் தூர்வாருதல், பழுதடைந்த மோட்டார்கள் மாற்றுதல், மின் ஆக்கிகள் வாடகைக்கு அமர்த்துதல் ஆகிய பணிகளுக்கு அனைத்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிகள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம், கால்நடை துறை ஆகிய துறைகளிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்களின் பேரில் கடந்த **21.03.2015–**லேயே **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு,** அரசாணை எண். **139**, வருவாய்த் துறை, நாள்.**21.03.2015–**ன் வாயிலாக முதற்கட்டமாக ரூ. **95.50** கோடி நிதி ஒதுக்கீடு செய்து குடிநீர் பிரச்சனையை சமாளிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதில் பெரும்பாலான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** தலைமையிலான அரசு தமிழக மக்களின் குடிநீர்த் தேவையையும், அதனை ஈடு செய்ய இருப்பிலே இருக்கின்ற நீராதாரங்களையும், எதிர்கொள்ள வேண்டியிருக்கும் பிரச்சனைகளையும், ஒருசேர கவனத்தில் கொண்டு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் உடனுக்குடன் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளையும் திறமுடன் செயல்படுத்தி வருகிறது.

ஆனால், இந்த செயல்பாடுகள் அனைத்தையும் முற்றிலுமாக மறைத்து **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களது** அரசின் மீது அவதூறு பரப்பும் நோக்கத்துடன் வாய் கிழிய பேசும் கருணாநிதி, அதிகாரம் செலுத்திய கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சியில் 5 வருடங்களில் குடிநீர்த் திட்டங்களுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மட்டும் செலவிடப்பட்ட தொகை ரூபாய் 4,943 கோடி மட்டுமே ஆகும். ஆனால் கடந்த 4 ஆண்டுகளில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** தலைமையிலான அரசால் தமிழகத்தில் குடிநீர்த் திட்டங்களுக்காக இதுவரை ரூபாய் 7,324.34 கோடி செலவிடப்பட்டுள்ளது

ஆக, குடிநீர் வழங்கும் திட்டங்களுக்காக போதிய அக்கறை செலுத்தப்படவில்லை என்ற கருணாநிதியின் குற்றச்சாட்டு 2016ம் ஆண்டு வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலை மனதில் வைத்து மெய்க்கலப்பே சிறிதும் இல்லாமல் சொல்லப்படும் பொய்யுரைத் தொகுப்பே ஆகும்.

சென்னை மாநகர மக்கள் தனக்கு இனி ஆதரவளிக்க மாட்டார்கள் என்பதை உணர்ந்து, திருவாரூருக்கு ஓடிய கருணாநிதிக்கு சென்னை மாநகர மக்கள் மீது திடீரென அன்பு பொங்கி வழிவது ஆச்சரியத்தையே தருகிறது. சென்னை மாநகர மக்கள் குடிநீரின்றி துயர்படுவது போலவும், தாய்மார்கள் தவிப்பது போலவும் இதுபற்றி அரசு எந்த அக்கறையும் காட்டாதது போலவும் ஒரு தோற்றத்தை உருவாக்க முயற்சித்திருக்கிறார் கருணாநிதி.

சென்னை மாநகர மக்களின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்ய தொலைநோக்கு பார்வையுடன் புதிய வீராணம் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் குடிநீர் கிடைத்திட வழிவகை செய்தவர் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.**

தமிழகம் முழுவதும் நிலத்தடி நீர்மட்டம் மற்றும் நீரின் தன்மையை மேம்படுத்திட தொலை நோக்கு பார்வையுடன் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை

2003ஆம் ஆண்டிலேயே கட்டாயமாக்கி இந்தியாவிலேயே முன்னோடியாக சட்டம் இயற்றியவர் **மாண்புமிகு அம்மா அவர்கள்.**

சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கிட கும்மிடிபூண்டி அருகே தேர்வாய்கண்டிகையில் 1000 மில்லியன் கனஅடி கொள்ளளவுடைய ஒரு புதிய நீர்த்தேக்கத்தை உருவாக்க **மாண்புமிகு அம்மா அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள்.

சென்னை மாநகருக்கு தொடர்ந்து மூன்றாண்டுகளாக பருவமழையினால் குடிநீர் வழங்கும் ஏரிகளுக்கு போதுமான நீர்வரத்து இல்லை. ஆனாலும் குடிநீர்ப் பற்றாக்குறை என்பது சென்னை மாநகர மக்களை தாக்காதவாறு பாதுகாத்து வருபவர் **மாண்புமிகு அம்மா அவர்கள்.**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்** சென்னை நகருக்கு குடிநீர் வழங்குவது குறித்து பல்வேறு உயர் அலுவலர்களுடன் தொடர்ந்து ஆய்வுக்கூட்டங்கள் நடத்தி மாநகர மக்கள் குடிநீருக்காக சிரமப்படாமல் இருக்க பல்வேறு குடிநீர்த் திட்டப்பணிகளை மேற்கொள்ள சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு 2013ல் ரூ.26.44 கோடியும், 2014ல் ரூ.50 கோடியும் 2015ல் ஆண்டில் ரூ.62.20 கோடியும் மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மானியமாக வழங்கி தேவையான உடனடிப்பணிகளை மேற்கொள்ள ஆணையிட்டவர் **மாண்புமிகு அம்மா அவர்கள்.**

சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையை ஈடு செய்ய திருவள்ளூர் மாவட்டத்தில் வாரியத்தின் கிணற்றுத் தளங்களுக்கு அருகாமையிலுள்ள விவசாயக்கிணறுகளை வாடகைக்கு அமர்த்தி ஜூன் மாதம் முதல் சென்னை நகர பயன்பாட்டிற்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இந்த அளவு படிப்படியாக உயர்த்தப்பட்டு நாளொன்றுக்கு சுமார் 85 மில்லியன் லிட்டராக நீர் எடுக்கப்பட்டு வருகிறது. இது தவிர, இந்த நிவாரண நிதியைக் கொண்டு சென்னைக் குடிநீர் வாரியம் சோழவரம் ஏரியில் பயன்படுத்த இயலாத 57 மில்லியன் கனஅடி நீரை ஏப்ரல் மற்றும் மே 2015இல் உந்துவிசை மூலம்

புழலேரிக்கு கொண்டு சென்று சென்னை மாநகர பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டது.

கோடைக்கு முன்னதாகவே மாநகரிலுள்ள பழுதடைந்த 1045 குடிநீர் தொட்டிகளை பழுது நீக்கியும், 934 பழுதடைந்த மேடைகளை புதுப்பித்தும், புதிதாக 200 குடிநீர் தொட்டிகளை நிறுவியும், நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.மேலும், 1050 புதிய குடிநீர் தொட்டிகள் நிறுவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குழாய் மூலம் குடிநீர் வராத தெருக்களிலுள்ள பொதுமக்களுக்கு கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சியில் 350 லாரிகள் மூலம் நாளொன்றுக்கு 2000 நடைகள் மட்டுமே குடிநீர் விநியோகிக்கப்பட்டது. ஆனால் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** லாரிகளின் எண்ணிக்கையை 520 ஆக உயர்த்தி, நாளொன்றுக்கு 5000 நடைகள் குடிநீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார்கள்

**மாண்புமிகு அம்மா அவர்களின்** சீரிய அறிவுரைகளின்படி, மேற்காணும் நடவடிக்கைகளை மே 2013ல் இருந்தே சென்னைக் குடிநீர் வாரியம் எடுத்து வருவதால் மூன்றாண்டுகளாக பருவமழை உதவிடத் தவறிய போதும் அருகாமையிலுள்ள 42 உள்ளாட்சிப் பகுதிகளை சென்னை மாநகருடன் ஒருங்கிணைத்ததால் கூடுதலாக சேர்ந்த 20 லட்சம் மக்கள் தொகை கொண்ட பகுதிகளுக்கும் தொடர்ந்து இன்று வரை குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

2014ஆம் ஆண்டில் சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையை **மாண்புமிகு அம்மா அவர்களது** தலைமையிலான அரசு சிறப்பாக கையாண்டதற்காக 27.04.2015 அன்று **கிரேக்க நாட்டின் ஏதென்ஸ் நகரில் நடைபெற்ற விழாவில் போர்ச்சுக்கல் நாட்டின் பிரதம மந்திரியாக இருந்த திரு ஜோஸ் மேனுவல் பரோசோ அவர்களால் 'நீர் தலைமை விருது – 2014' என்னும் விருது** சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

சென்னை மாநகர மக்களுக்கு தடையின்றி குடிநீர் வழங்கிட மீஞ்சூரில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்திற்கு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**

**புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தான்** அடித்தளம் அமைத்து தந்தார்கள். கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சியில் ஆமை வேகத்தில் செயல்படுத்தி வந்த, 28 விழுக்காடு பணிகள் மட்டுமே முடிந்திருந்த நெம்மேலி கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தை விரைந்து செயல்படுத்தி **மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்** தமது பொற்கரங்களால் 22.02.2013 அன்று தொடங்கி வைத்தார்கள். மேலும் வருங்கால குடிநீர்த் தேவையை கருத்தில் கொண்டு **மாண்புமிகு அம்மா அவர்கள்** அறிவித்தவாறு, நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தினை ரூ.4070.67 கோடி மதிப்பீட்டில்சென்னை, கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள பேரூரில் அமைத்திடவும், ஏற்கனவே நெம்மேலியில் அமைந்துள்ள சுத்திகரிப்பு நிலைய வளாகத்தில் உள்ள 10.50 ஏக்கர் காலி இடத்தில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையத்தினை, ரூ.1371.86 கோடி மதிப்பீட்டில் அமைத்திடவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், மத்திய அரசின் வனம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் அமைச்சகத்தின் நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள கடற்கரை ஒழுங்குமுறை மேலாண்மைக் குழுமத்தின் ஒப்புதல் பெற வேண்டி நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை மாநகருடன் 2011ஆம் ஆண்டில் இணைக்கப்பட்ட 42 உள்ளாட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுதலுக்கான கட்டமைப்புகள் பல்வேறு நிலைகளில் சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம் 2012–13 மற்றும் 2013–14 முதலான பல்வேறு நிதியாதாரங்களைக் கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது. சென்னை மாநகராட்சியில், கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சிக் காலத்தில் 2006 – 2011ல் ரூ.1025.93 கோடிகள் செலவில் குடிநீர் திட்டங்களும் ரூ.198.71 கோடிகள் செலவில் கழிவுநீர் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டன. ஆனால் கடந்த நான்காண்டுகளில் **மாண்புமிகு அம்மா அவர்களது** அரசு, 2011 – 2015 ஜூன் வரை ரூ.1323.20 கோடிகள் செலவில் குடிநீர் திட்டங்களையும் ரூ.1004.41 கோடிகள் செலவில் கழிவுநீர் திட்டங்களையும் செயல்படுத்தி உள்ளது.

தெலுங்கு கங்கை திட்டத்தின்கீழ் ஆந்திர மாநில கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து சென்னைக்குத் தேவையான நீரைப் பெற தொடர்ந்து **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால்** நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. உப்பள மதகு அருகில் தெலுங்கு கங்கை கால்வாய் மழைவெள்ளத்தால் பழுதடைந்தபோதிலும் மாற்று ஏற்பாடாக போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டு அந்த இடத்தில் குழாய்களை பதித்து நீர்பெறப்பட்டது. பின்னர் கால்வாய் மீண்டும் புனரமைக்கப்பட்டு இந்த ஆண்டிலும் நீர்பெறப்பட்டது. **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் அறிவுறுத்தலின் பேரில்** தலைமைச் செயலர், பொதுப்பணித்துறை செயலர் மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் ஆகியோர் பலமுறை ஆந்திர மாநிலத் தலைநகரான ஐதராபாத் சென்று நீரைப் பெற தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். மேலும், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி,** நான் தொடர்ந்து பலமுறை ஆய்வு மேற்கொண்டதுடன், தலைமைச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலர் வாயிலாகவும் உரிய அறிவுரைகளை வழங்கி, சென்னைக் குடிநீர் வாரியத்தின் செயல்பாடுகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

ஒரு குடம் தண்ணீர் ரூ.6க்கு விற்கப்படுகின்றது என்பது இட்டுக் கட்டிய பொய்யாகும். பல பகுதிகளில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் தான் குடிநீர் வருகின்றது எனக் கூறிவிட்டு தியாகராய நகர் பகுதியில் கடும் குடிநீர் தட்டுப்பாடு நிலவுவதாகக் கருணாநிதி கூறுவது வார்த்தை ஜாலமாகும்.

பல்லவபுரம் நகராட்சி பகுதிகளில் தற்போது நாள் ஒன்றுக்கு 6.00 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. நகரில் நீர் அழுத்தம் குறைவாக உள்ள பகுதிகள் கண்டறியப்பட்டு, அப்பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் லாரிகள் மூலம் தெருக்களில் அமைக்கப்பட்டுள்ள 120 குடிநீர்த் தொட்டிகளில் தினசரி இருமுறை நிரப்பப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மைனாரிட்டி திமுக அரசு 2,15,000 மக்கள் தொகை கொண்ட பல்லாவரம் நகராட்சிக்கு எந்தவொரு குடிநீர்த் திட்டத்தையும் செயல்படுத்தாமல், இப்போது 10 முதல் 15 நாட்களுக்கு ஒரு முறை மட்டுமே குடிநீர் கிடைக்கிறது என நாளிதழ் செய்திகளை வழிமொழிவது கருணாநிதியின் கையாலாகத்தனத்திற்கு கண்கண்ட சாட்சியமாகும். ஆனால் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்** தாயுள்ளம் கொண்டு பல்லாவரம் நகராட்சி குடிநீர்த் திட்டத்திற்கு ரூ. 99.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்து மார்ச்–2016ல் முடிக்கும் வகையில் இத்திட்டத்தை விரைந்து நிறைவேற்றி வருகிறார்கள். இதன் வாயிலாக நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் குடிநீர் வழங்கப்படும்.

தமிழகத்திலுள்ள சென்னை தவிர்த்த பிற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 2011ம் ஆண்டில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 93 லிட்டர் வீதம் தினமும் மொத்தம் 1567.10 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டது. ஆனால், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்** அரசு இந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பல்வேறு திட்ட நிதிகளின் கீழ் ரூ.1566.97 கோடி மதிப்பீட்டில் 137 குடிநீர்த் திட்டங்களை செயல்படுத்தியதன் வாயிலாக குடிநீர் விநியோகம் மேம்படுத்தப்பட்டு, நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 110 லிட்டர் வீதம் தினமும் மொத்தம் 1794.40 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது.

மேலும், 213 திட்டங்கள் பல்வேறு நிதி ஆதாரங்களின் கீழ் ரூ.2864.09 கோடி மதிப்பீட்டில் செயலாக்கத்தில் உள்ளன.மேற்படி பணிகள் முடிவுற்ற பின்னர் குடிநீர் விநியோகம் மேலும் மேம்படுத்தப்பட்டு, தினமும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் வரை குடிநீர் வழங்கப்படும்.

பேரூராட்சிகளைப் பொறுத்த வரையில், மொத்தமுள்ள 528 பேரூராட்சிகளில், தற்போது நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டருக்கும் அதிகமாக 518 பேரூராட்சிகளிலும், 70 லிட்டருக்கும் குறைவாக 10 பேரூராட்சிகளிலும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த 10

பேரூராட்சிகளிலும் பல்வேறு குடிநீர்த் திட்டங்களின் வாயிலாக ரூபாய் 28.84 கோடி மதிப்பீட்டில் பணிகள் செயலாக்கத்தில் உள்ளன. இப்பணிகள் அனைத்தும் முடிவுற்றதும், விரைவில் இந்த 10 பேரூராட்சிகளிலும் 70 லிட்டருக்கும் அதிகமான அளவில் குடிநீர் விநியோகம் செய்யப்படும். கடந்த 4 ஆண்டுகளில், பேரூராட்சிகள் துறையில் மட்டுமே 363.14 ரூபாய் கோடி மதிப்பில் குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால்** சென்ற மே மற்றும் ஜூன் 2015–ல் ரூ.633 கோடி மதிப்பீட்டில் விருதுநகர் மற்றும் சேலம் மாவட்டங்களில் மூன்று பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், மேட்டூர், இடைப்பாடி, பள்ளிபாளையம், குன்னூர் ஆகிய நகராட்சிகளில் ரூ. 56.50 கோடி மதிப்பிலும் தனிக் குடிநீர்த் திட்டங்கள் உள்ளிட்ட மொத்தம் 23 குடிநீர்த் திட்டங்கள் ரூ.826.25 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பிலும், நகராட்சி நிர்வாகம் சார்பில் சேலம் மாவட்டம் ஆத்தூர் நகராட்சியில் ரூ.7.13 கோடியிலும் குடிநீர்த் திட்டங்கள் மூலம் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால்** துவக்கி வைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

உண்மை நிலை இவ்வாறிருக்க, அரசியலுக்காக அவதூறு கூறுவதையே தன் லட்சியமாகக் கொண்ட கருணாநிதியின் கூற்று தமிழக மக்களிடம் இனிமேலும் சற்றும் எடுபடாது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை** சூழ்ச்சியால் வீழ்த்தி தனது மகன் ஸ்டாலினை கொண்டு வந்து விடலாம் என்று எண்ணி இறுமாந்திருந்தார் கருணாநிதி. ஆனால் கருணாநிதியின் சூது வலையை அறுத்து, பொய் வழக்கைப் பொடிப்பொடியாய் தகர்த்து **மாண்புமிகு அம்மா அவர்கள்** விஸ்வரூபமாய் எழுந்து நிற்கிறார்.

இதனை தாங்கிக் கொள்ள முடியாத கருணாநிதி வயிற்றெரிச்சலால் ஒவ்வொரு அறிக்கையிலும், **மாண்புமிகு அம்மா அவர்கள்** நலம்பெற தமிழக மக்கள் மேற்கொண்ட பிரார்த்தனைகளையும் நேர்த்திகளையும் தொடர்ந்து கொச்சைப்படுத்தி வருகிறார். மனைவி, மகள் மற்றும் மருமகள்களை கோவிலுக்கு அனுப்பி வைத்துவிட்டு, மானசீகமாக கடவுளை வேண்டும் கருணாநிதிக்கு உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் ஒருங்கு திரண்டு செய்த பிரார்த்தனைகளை விமர்சனம் செய்வதற்கு எந்த அருகதையும் இல்லை.

அனைத்து வழிகளிலும் தோல்வியைத் தழுவிய கருணாநிதி தண்ணீர் தட்டுப்பாடு எனக் கூறுவது மக்களை திசை திருப்பி விடலாம் என்ற கைக்கூடா நற்பாசைதானே ஒழிய வேறில்லை. கருணாநிதியின் குறை கொண்ட அறிக்கைகளால் மக்களை குழப்பவும் முடியாது, அவரது அரைகுறை அறிக்கைகளால் **மாண்புமிகு அம்மா அவர்களுக்கு** இருக்கும் மக்கள் செல்வாக்கை மாற்றவும் முடியாது. மீண்டும் அதிகாரத்தை கைப்பற்றி விடலாம் என்ற அவரது கனவு என்றுமே நனவாகாது.

-----

**திரு எஸ்.பி.வேலுமணி**

**மாண்புமிகு நகராட்சி நிருவாகம் , ஊரக வளர்ச்சி, சட்டம்,**

**நீதிமன்றம் மற்றும் சிறைத்துறை அமைச்சர்**

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**